உயிரற்றவற்றிலிருந்து ஜீவன்

Life from the Lifeless



22 Prayers for Resurrection in Ruin

பாழடைந்தவற்றில் உயிர்த்தெழுதலுக்கான 22 ஜெபங்கள்

These prayers were born in the long night of the soul— in seasons of hidden tears and unspoken grief, when rejection wore many faces: overqualified yet unwanted, unqualified yet burdened with vision, passed over, misunderstood, cast aside.

They rose from the crucible of countless small deaths— micro-wounds of daily despair, macro-shadows of loss and isolation, emotional tempests, spiritual wilderness, physical darkness that words fail to name.

Yet in the deepest valley, a whisper remained: “Thank You, Father.”

These letters to Heaven were penned not in triumph, but in trembling trust— raw, unpolished, honest before the Throne.

And now, by the mercy of the Father, in the Name of the Lord Jesus Christ, and through the fire of the Holy Spirit, these private cries are released as public light— that any fellow traveler in the shadows might find companionship on the road, and glimpse the dawn that always follows the darkest hour.

May every reader who opens these pages hear the same gentle voice that carried the writer: “You are not alone. I have heard every prayer. The morning comes.”

To the glory of the One God— Father, Son, and Holy Spirit— whose perfect Oneness turned my midnight into song.

Amen.

இந்த ஜெபங்கள் ஆத்துமாவின் நீண்ட இரவில் பிறந்தன— மறைந்த கண்ணீர்களும் பேசப்படாத துயரங்களும் நிறைந்த காலங்களில், நிராகரிப்பு பல முகங்களை அணிந்திருந்தபோது: அதிக தகுதியுடையவனாக இருந்தும் விரும்பப்படாதவன், குறைந்த தகுதியுடையவனாக இருந்தும் பார்வையால் சுமக்கப்பட்டவன், புறக்கணிக்கப்பட்டவன், தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டவன், ஒதுக்கிவைக்கப்பட்டவன்.

அவை எண்ணற்ற சிறு மரணங்களின் உலையிலிருந்து எழுந்தன— தினசரி துயரத்தின் சிறு காயங்கள், இழப்பு மற்றும் தனிமையின் பெரிய நிழல்கள், உணர்ச்சிக் காற்றழுத்தங்கள், ஆவிக்குரிய பாலைவனங்கள், சொற்களால் விளக்க முடியாத உடல் இருள்.

ஆனால் ஆழ்ந்த பள்ளத்தாக்கிலும், ஒரு முணுமுணுப்பு இருந்தது: “நன்றி, பிதா.”

இந்த சொர்க்கத்திற்கான கடிதங்கள் வெற்றியில் எழுதப்படவில்லை, ஆனால் நடுங்கும் நம்பிக்கையில்— மூலமானவை, பளபளப்பற்றவை, சிங்காசனத்திற்கு முன் நேர்மையானவை.

இப்போது, பிதாவின் இரக்கத்தால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், பரிசுத்த ஆவியின் தீயால், இந்த தனிப்பட்ட அழுகைகள் பொது ஒளியாக வெளியிடப்படுகின்றன— நிழல்களில் பயணிக்கும் எந்த சக பயணியும் பாதையில் தோழமையைக் காணட்டும், மிக இருண்ட மணிநேரத்திற்குப் பின்னர் எப்போதும் வரும் விடியலைப் பார்க்கட்டும்.

இந்த பக்கங்களைத் திறக்கும் ஒவ்வொரு வாசகனும் எழுத்தாளரைத் தாங்கிய அதே மென்மையான குரலைச் செவிமடுக்கட்டும்: “நீ தனியாக இல்லை. நான் ஒவ்வொரு ஜெபத்தையும் கேட்டேன். காலை வருகிறது.”

ஒரே கடவுளின் மகிமைக்காக— பிதா, மகன், பரிசுத்த ஆவி— அவருடைய சரியான ஒருமை என் நள்ளிரவை பாடலாக மாற்றியது.

ஆமென்.

18 JULY 2008

உமக்கே கிருபையின் தேவன் என்ற புகழ் உண்டாவதாக.
நீர் பெரியவராய் இருக்கின்றீர் உமக்கு கனம் உண்டாவதாக.
நீர் வல்லவராய் இருக்கின்றீர் உமக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.
உமக்கே உம் நாமத்திற்கே மகிமை உண்டாயிருப்பதாக.
உம்மையல்லாமல் எனக்கு யாருமே இல்லை நீரே அன்புக்குரியவர்
உம் நாமம் மகிமைப்பெறுவதாக உமக்கே வல்லமை உண்டாயிருப்பதாக.
வாழ்த்துதல், போற்றுதல் மகிமை கனங்கள் உண்டாகியிருப்பதாக.
என் உயிருக்கும் மேலான என் அன்பு தெய்வமே நீர் வாழ்க
இன்றைக்கு என்னை உயிரோடே காத்தவர் நீர்தான் ஐயா
உம் இரக்கங்களுக்கு முடிவே இல்லை என்பேன் நீர் பெரியவர்
உம் அன்பிற்கு அளவே இல்லை என்பேன் நீர் அதிசயர்
உமக்கு என் வாழ்த்துக்களும் போற்றுதல்களையும் தெரிவிக்கிறேன்
நீரே நல்லவர் நீரே பெரியவர் நீரே வாக்கு மாறாதவர்
உமக்காய் என்னைத் தெரிந்தெடுத்தீர் உமக்கு உரியவளை மாற்றினீர்.
உம் வல்லமைகள் இந்த தேசத்தில் பெரியதாய் விளங்குவதாக.
நீர் எல்லாம் வல்லவர் எனக்கு அருகில் இருப்பவர்
உம்முடைய இரக்கங்களின் மகிமையால் நான் ஜீவன் பெற்றேன்
உம்முடைய அன்பின் நிமித்தமாய் நான் நன்மைகள் பெற்றேன்
என் வாழ்வின் புது திருப்புமுனையாய் நீர் வந்தீர்
என் ஜீவப்பாதையில் எனக்கொரு ஜீவப்பயணத்தை தந்தீர்
எல்லாவற்றிலும் என்னைப் பாதுகாத்து வழிநடத்தி சென்றீர்
உம்முடைய கரங்களில் நான் தவழ்ந்து போக ஆசைப்படுகிறேன்
நீரே என்னை தொட்டு அசைப்படுத்தி பலப்படுத்தும் தேவா.
உம்மையன்றி எனக்கு ஏதுமில்லை நீரே பெரியவர்
உமக்காக தானே வாழ்கிறேன் ஐயா என்னைப் பார்த்திடும்
நீரே எனக்கே உரியவர் சமாதான காரணர் நீரே
என்றும் என் தலைமுறைகளுக்கும் தெய்வமானவர் நீரே
உம்மைத்தவிர எனக்கு என்ன முக்கியம்? நீரே சத்தியம்
உம்மிடத்தில் எனக்கு இளைப்பாறுதல் உண்டு அது தொடரும்
உம்மையே எனக்காய் தந்தீர் நான் என்னத்தை தருவேன்.
என்னுடைய மீதியான வாழ்நாளெல்லாம் உம் கையிலே
என்னுடைய எல்லாவிதமான பொருளும் உம்முடையதே
உம்மிடத்திலே எனக்கு சகலமும் அபரிதமாக கொடுக்கப்பட்டது.
உம்மிடத்திலே புது ஊற்று நதியாய் பாய்கின்றது.
இயேசுவே உம்முடைய ஜீவநதி என்னில் புறப்பட்டு போகிறதே
இயேசுவே இயேசுவே இயேசுவே நீரே எனக்குப் போதும்
என்னுடைய வாழ்நாள் உம்மிடத்திலே எடுத்துக்கொள்ளும். ஆமென்.

18 JULY 2008

தேவனே உமது கிருபை என்னை சூழ்ந்துக்கொண்டிருப்பதாக.
தேவனே உமது வல்லமை எங்களை ஆள்வதாக
தேவனே உமது மகிமை உமக்கே உரியதாக
தேவனே உமது அன்பு எனக்கும் எல்லோருக்கும் சொந்தமாவதாக
தேவனே உமது இரக்கம் என்னை தாங்கியிருக்க வேண்டும்.
தேவனே என் இயேசுவே என் ராஜாவே உம்மைப் போற்றுகிறேன்.
இயேசுவே என் ஜீவனே என்னை எடுத்துக்கொள்ளும்
இயேசுவே நான் அல்ல என்னில் நீரே வாழ்கின்றீர்.
இயேசுவே என்னில் நீரே உயிரும். உமக்கு நான் சொந்தம்.
இயேசுவே எனக்காய் சிலுவை சுமந்தவரே வாழ்க.
இயேசுவே எனக்கினி வாழ்வைத் தருபவரும் நீரே வாழ்க.
அன்புக்கு உரியவரே என் அப்பா பிதாவே
உம்முடைய சொந்த குமாரனை எங்களுக்காய் தந்தீர்.
என்னிடத்தில் என்ன இருந்ததை நான் உமக்குத் தருவேன்?
அப்பா உம்மைத்தவிர எனக்கு வேறொன்றும் தேவையில்லை.
ராஜா உம்மைத்தவிர எனக்கு வேறு ராஜாவும் இல்லை.
உம்முடைய இரக்கங்களின் ஐசுவரியத்தினால் என்னை நிரப்பினீரே.
உம்மை வாழ்த்திப் போற்றி என்றென்றும் துதி செலுத்துகிறேன்.
நீரே எனது ஜீவனானவர் உமது மகிமை அளவிடமுடியாதது.
உமக்காய் என் கைகள் கிரியைகளை செய்கின்றது.
நீர் தந்த இவைகளுக்காய் ஸ்தோத்திரம் மகிமையும் உண்டாவதாக.
எனக்கு வழியைத் தெரியப்படுத்தி வாழ்வைத் தந்தவர் நீரே
எப்போதும் என்றென்றும் என் தேவனாய் நீர் இருக்கப்போகின்றீர்
பரலோகம் எனக்காய் காத்திருக்கின்றது நானும் தயார்.
பரலோகம் என்னைத் தேடி வந்திருக்கின்றது நானும் இருக்கிறேன்.
பரலோக வாழ்வை எனக்குத் தருகின்றீர் நானும் என்னை உமக்குத் தந்தேன்.
பாரத்தில் பல ஆத்துமாக்களுக்காய் மாளிகையை கட்டுகின்றீர்
எனக்காயும் ஒரு அறையை ஆயத்தப்படுத்தியுள்ளீர்
இராஜா, நீர் எனக்காய் செய்த யாவற்றிற்குமாய் நன்றி
உம்முடைய நாமம் ஸ்தோத்தரிக்கப்படுவதாக அது நல்லது
நீரே எல்லோருக்கும் தலையானவர் உம்மைப் போற்றுகின்றேன்.
வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றேன் வாழ்த்தியே போற்றுவேன்
உமக்கான இருந்ததை நான் செலுத்தி மகிழ்கின்றேன்
உம்மையே அன்பிற்காய் நன்றி சொல்லி மகிழுவேன்
நித்திய வாழ்வுதனை எனக்குத்தந்தீர் நீடிய பொறுமை தந்தீர்
எல்லாவற்றிற்குமாய் ஜெபத்து பதில் கிடைக்க போராட செய்தீர்
உண்டாயிருப்பதாக. ஆமென்.
உமக்கே என்றும் மகிமை

19 JULY 2008

என் தேவனே உம்மோடு நான் நிலைத்திருக்கும் வரையிலும்
நான் எதற்கும் அஞ்சாமல் முன்னேறிச் செல்வேன். நான் பயப்படேன்
இறைவா, உம்மிலே நான் நிலைத்திருக்கச் செய்திடும்.
உம்மோடு கூட தினந்தோறும் நடக்கச் செய்திடும்.
இறைவா, உம்முடைய வார்த்தையிலே நான் நிலைத்திருக்கச் செய்திடும்.
உம்முடைய வார்த்தையைப் போலவே என்னை சுத்தப்படுத்திடும்.
உம்முடைய உள்ளங்கையில் என்னை பொறித்து வைத்திடும்.
தீமைக்கு விலகுபவனாய் நன்மையை நோக்கி ஓடுபவனாய் மாற்றிடும்.
பாவத்தை வெறுப்பவனாய் பரிசுத்தத்தில் நிலைப்பவனாய் மாற்றிடும்.
என்னுடையதின் நீதி ஒன்றுக்கும் உதவாதே உம் நீதி எனக்கு வேண்டும்
என்னுடைய ஆவியின் நோக்கங்களை நீரே அறிந்திருக்கின்றீர்
என்னுடைய ஆத்துமாவை நல்வழிக்கு திருப்பிய தேவன் அல்லவோ நீர்!
உம்முடைய பரிசுத்தம் என்னை ஆட்சி செய்யட்டும் வல்லமை பெருகட்டும்
உமக்கே துதியும், புகழும், கனமும் உண்டாகியிருப்பதாக.
எனக்காக யாவையும் செய்து முடித்த என் இரட்சகரான இயேசுவே
இன்னும் உம்மை அறிய வேண்டுமே எனக்கு நீர் வெளிப்படுமே.
தாகமுள்ளவனுக்கு தண்ணீரை அளவில்லாமல் தருவேன் என்றீர்.
இதோ தாகமாய் இருக்கிறேன் என்னைத் திருப்தியாக்கும்.
ததும்புகின்ற இடம்போல நான் வேண்டாம் நிறைவுடமாக ஆக்கும்,
இயேசுவே, உம்முடைய எல்லையில்லா அன்பை இவ்வுலகம் வெறுக்கிறதே!
எப்படி இறைவா, உம் அன்பை நான் உலகிற்கு கொண்டு செல்வேன்
எனக்கு உதவிடும் இறைவா, என்னை பெலப்படுத்திடும் இராஜா.
என் பாவத்தை நான் வெறுக்கின்றேன் அதை அகற்றிவிடும் தேவா.
எக்காலமும் உம்மை ஆராதித்துக்கொண்டிருக்கவே நான் விரும்புகிறேன்.
எந்நேரத்திலும் உம்மை துதித்துக்கொண்டிருக்கவே நான் பிரியப்படுகிறேன்.
உம்மை என்னுடைய இருதயத்தில் முதலிடத்தில் வைத்திருக்கின்றேன்.
நீர் அறிவீர் என்னை புரிந்து கொண்டிருக்கிறீர், என்னை விசாரிக்கிறீர்
உமக்கே மகிமை உண்டாவதாக உமக்கே சமாதானம் இருக்கின்றது.
ஆண்டவரே, என் ஆவி எப்போதும் உம்மை சார்ந்திருக்கச் செய்யும்.
நீடித்த நாட்களால் என்னை வாழச்செய்யாதபடி பூமியில் என்னை விலக்கிடும்
நித்திய வாழ்வைக் கொண்டுள்ள பரலோகத்திற்கு அழைத்துச் சென்றிடும்.
வாழ்க்கை எனக்கு நீர் தந்த பிச்சை அது உமக்கு உரியது
என் சுவாசம் நீர் எனக்கு தந்த தானம் அது ஜீவனைக் கொண்டது,
உம்முடைய இரத்தங்களின் மகிமையால் நான் பிழைத்துக்கொண்டேன்.
உம்முடைய அன்பின் மிகுதியால் நான் அழைக்கப்பட்டிருக்கிறேன்.
உம்முடைய கிருபையின் மகிமையால் நான் தெரிந்துகொள்ளப்பட்டேன்.
நீரே என் தெய்வம் என்று ஒரு பொய்யும் இல்லாமல் சொல்வேன், ஆமென்.

19 JULY 2008

மகிமைக்கு பாத்திரரே, நீதியின் சூரியனே உம்மை துதிக்கின்றேன்
அதிசயமாய் என்னை உமது நிழலில் தங்கச்செய்தீர் ஸ்தோத்தரிக்கின்றேன்
வல்லமை மகிமை துதிகள் யாவும் உமக்கே உரியன.
நீதியின் சூரியனை என்மேல் பிரகாசிக்கச் செய்திடும்.
உம்முடைய நியதிகள் பிரமிக்கச் செய்கின்றது அவை மகா ஆழமானது
வானத்தையும், பூமியையும் உண்டாக்கின வல்லவரே
வற்றாத நதிகளையும், ஆறுகளையும் உண்டாக்கின ஜீவ ஊற்றே
உயிரினத்தை உருவாக்கி அதை அழகாக்கின சிருஷ்டிகரே
ஆகாய விரிவை உண்டாக்கின அழகான அலங்காரமுள்ளவரே
அதிசயம் செய்திடும் அற்புதம் செய்திடும் இவ்வுலகத்திலே
பழைய ஏற்பாட்டின் கால அற்புதங்கள் இப்போதும் நடப்பதாக.
ஏனெனில் என் தேவன் இருக்கிறவராகவே இருக்கின்றீர்.
புதிய ஏற்பாட்டின் அற்புதங்கள் இன்றுமாய் அதிகமாவதாக.
ஏனெனில் என் இயேசு இராஜா நீர் இன்றும் இருக்கின்றீர்.
உமக்கெதிராக எத்தனைப் படைகள் வந்தாலும் அதை முறியடிப்பீர்
எனக்கெதிராக உம் நாமத்தில் ஒன்றுமில்லை நீரே என் அடைக்கலம்.
எத்தனை பகைமையாய் சத்துருக்கள் என்னை எதிர்த்து வந்தாலும்
நான் பயந்து போக மாட்டேன் என்றும் தைரியம் கொள்வேன்.
உமக்காய் மரித்தாலும் நான் அங்கே உயிர் வாழ்வேன்.
அந்த பாக்கியத்தை எனக்கு நீர் இன்றே தந்தருளும்.
எனக்கு பிரியமானது யாதொன்றும் எனக்கு வேண்டாம்.
உமக்கு பிரியப்பட்டதை எனக்கு தந்தால் அதை பெறுவேன்.
தேவா, உம்முடைய அன்பு எத்தனை பெரியது.
அதை சொல்லும் போதெல்லாம் மயிர்க்கூச்செறிகின்றது.
உம்முடைய நினைவிலே நின்றுக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.
என்னை மறந்து விடாதேயும் இறைவா, என் நண்பர்களைப் போல
என்னை வெறுத்து விடாதேயும் இறைவா, என்னைச்சார்ந்தவர்களைப் போல
என்னை தள்ளி விடாதேயும் இயேசுவே, என் சகோதரனைப் போல
என்னை விட்டுவிடாதேயும் இராஜா, மரணப்பள்ளத்தாக்கில் நடக்கும்போது
என்னை விட்டு விலகாதேயும் இராஜா, நான் மரித்துப் போவேன்
என்னை தப்பி விடாதேயும் தேவா, நான் உமக்கு தோத்திரம் தருவேன்.
என்னை சாந்திப்பண்ணிவிடாதேயும் கர்த்தரே, நான் அனலாய் இருப்பேன்.
என்னை பலப்படுத்தி எனக்கு உயிர் தந்து காத்துக்கொள்ளும் தேவா
என் ஜீவனுள்ள நாளெல்லாம் உம் நன்மை என்னைத் தொடரட்டும்
என் வாழ்வின் முடிவு பரியந்தமும் உம்மோடு இருக்க வேண்டுகிறேன்
உம் ஜீவனை எனக்குத் தந்தீர் நீர் வாழ்கவென்று வாழ்த்துவேன்
உம்முடைய வார்த்தைகளால் என்னைத் திருப்தியாக்கும் இயேசுவே. ஆமென்.

20 JULY 2008

என் இரக்கம் நிறைந்த தேவா, உம்மைப் போற்ற வார்த்தைகளில்லை
நீரின்றி எனக்கு சமாதானம் இல்லை. நீரே சமாதானக் கர்த்தர்.
உம்முடைய இரக்கங்களின் மகிமையால் நான் நிலைக்கின்றேன்
இயேசுவே இயேசுவே உம்மையன்றி எனக்கு ஆறுதல் இல்லை
என் தகப்பனே என் இராஜாவே உமக்கே நன்றியை ஏறெடுக்கிறேன்
உமக்கு நான் என்னத்தைக் கொடுப்பேன் என்னையே கொடுத்தேன்
அப்பா, இந்த மாம்சத்தை நீர் தங்கம் பாத்திரமாக மாற்றி விடும்
அப்பா, இந்த உலகத்திலே யாருக்கும் கிடைக்காத பாக்கியம்
என் இயேசப்பா எனக்கு கொடுத்திருக்கிறார் என்னை ஏற்றுக்கொண்டார்
ஜீவனைக் காக்கின்ற இயேசு நாதாவே நன்றி நன்றி என்பேன்
என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள் நீரே நீர் மாத்திரமே
உமக்கே நான் என்றென்றும் கடமையுள்ளவளாய் இருக்க வேண்டுகிறேன்
என் ஜீவனை நீர் கொடுத்தீர் அதை நீர் பாதுகாக்கின்றீர்
எத்தனை பள்ளங்களைக் கடந்து போனாலும் நீர் கூடவே வருகிறீர்
என் இயேசப்பா, மகிமைகளை உமக்கு சொந்தமாக்கியுள்ளீர்
அவைகளை கொண்டிருப்பதற்கு பாத்திரவானாய் நீர் இருக்கின்றீர்
உமக்கே என்னுடைய ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கின்றேன்.
உம்முடைய நித்திய காலம் என்னிலே நிறைந்து வருவதாக.
இருளின் அதிகாரத்திற்கு அகன்று போய் வெளிச்சத்தில் இன்
கடந்து வர என் கால்களுக்கு தீபமாய் நீரே இருக்கின்றீர்.
மரணப் பள்ளத்தாக்குகள் என் முன் தென்பட்டாலும்
இயேசு நாமத்தில் நான் அதைக் கண்டு அஞ்சமாட்டேன்,
என் தேவா, நீரே மகிமைக்கு பாத்திரர் என்பேன்
என்னுடைய வாழ்க்கையின் பெலனுமாய் நீர் இருக்கின்றீர்
என் ஜீவனின் அதிபதியே வற்றாத நீரூற்றே நீர் வாழ்க
உம்முடைய கிருபை என்னோடும் உள்ளது அது எப்போதும் உள்ளது.
என்றென்றும் உம்மை வாழ்த்தி துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்.
அல்லேலூயா என்று சொல்லி ஆர்ப்பரித்து ஆசீர்வாதத்தைத் தேடி வருவேன்
என் வாழ்வின் எல்லாமெல்லாம் உம்மோடு இருப்பது தான் தேவா
உம்மோடு நான் வாழ்ந்து நித்தியகாலமாய் ஜீவிக்க வேண்டுகிறேன்
வாழ்த்துதல்களோடு உம் வசனத்தோடு எங்கும் நடைபோவேன் நான்
என் வாசல்களில் நீரே உம்முடைய தேவதூதர்களை நிறுத்துவீராக.
ஒவ்வொரு நாளும் எனக்கு வேண்டியவைகளை கொடுக்கும் கர்த்தரே
உம்மைப்போற்றி வாழ்த்துதலின் உச்சத்தில் ஆராதிக்கிறேன்.
அன்பின் தகப்பன் நீர்தான் என்றுமே உம்மை காண்பேன்
வல்லவர் நீர் நல்லவர் நீர் நீரே என்னை காண்பவர்.
அதிசயர் நீர் என்னை அதிசயிக்கச் செய்பவர் நீரே. ஆமென்

20 JULY 2008

என்னுடைய வாழ்நாளில் நான் கோபப்படாமல் இருக்க உதவி செய்யும்,
எத்தனை தான் சோதனைகள் வந்தாலும் உம்மையே சார்ந்திருக்கச் செய்யும்,
என்னைப் படைத்த என்னுடைய தேவன் நீரே இயேசு இராஜாவே
என்னை எடுத்துக்கொள்ளும். வேண்டாமே இந்தப் பழிவாங்கும் உலகம்
இந்தப் புதிய பாத்திரம் பரிசுத்தமாக்கி உயர்த்திட வழி காட்டும்
என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் நீர் தாரீர்
வேண்டாத எண்ணங்களை என் கண்களை விட்டு விலக்கிவிடும்
வேண்டாத சொற்கள் என் காதில் விழாத படி செய்திடும்
வேண்டாத பார்வைகளை என் காதில் விழாத படி செய்திடும்
உமக்கே மகிமை உண்டாகியிருப்பதாக. நீரே ஜீவனுள்ள தேவன்
என்னுடைய தேவாதி தேவன் நீரே நீர் மாத்திரமே
உம்மை நான் வாழ்த்தி போற்றி என்றும் துதிப்பேன்.
நீர் ஜீவனுள்ள தேவன் என்று என் இருதயத்தில் தெரிந்திருக்கின்றது.
எனக்காய் ஜீவனை விட்டு என் பாவங்களுக்காய் நீர் ஜீவபலியானீர்
உம்முடைய இரக்கங்களின் பாதையால் நான் உயிர்வாழ்கிறேன்
தேவா மகிமை நிறைந்த அற்புதரே நீர் வாழ்கவென வாழ்த்துவேன்
மிகப்பெரிய வேண்டுதல்களோடு உம்மை நான் கண்டடைவேன்
எனக்கு உம்மை ஆதாரமாகவேயும் அபயமாக வந்து என்னை பார்த்திடும்
ஆகாய விரிவிலே உம்முடைய வார்த்தைகள் நிறைவடைந்து கொண்டிருக்கிறது
ஆகாயப் படைப்புகளிலே நீர் படைத்தவைகள் யாவையும் அதிசயமானதே.
உமக்கே நான் நன்றிகளை ஏறெடுக்கின்றேன் அது சமாதானம்
இறைவா, பலப்பல தேசத்திற்கு கடந்து போய் உம் சுவிசேஷத்தை சொல்லவும்
உலகம் யாவையும் உம் நாமத்தினால் அன்றி வர அழைக்கிறேன்
செல்லுமிடமெல்லாம் உம்மையே நான் சார்ந்திருக்க விரும்புகிறேன்
வலம் வருகின்ற பகுதிகளிலெல்லாம் உம் அற்புதங்கள் நடந்தேற வேண்டுகிறேன்
உம்மையே ஆராதித்து உம்மையே வாழ்த்தி உம்மையே போற்றுகிறேன்
உண்மையான மனிதனை தினந்தோறும் புதிதாக்கி பரிசுத்தப்படுத்தும் தேவா.
என்னுடைய இராஜாதி இராஜா தேவாதி தேவா என்னுயிரானவரே
உம்மையே நோக்கி இரவும் பகலுமாய் காத்திருக்கின்றேன்.
உம்மையல்லாமல் எனக்கு எதுவும் தேவை வேண்டாம்.
நீரே என் தெய்வம் இறைவா உம்மிலே நிலைத்திருக்க உதவி செய்யும்
அதிசயமானவரே அற்புதமான தேவனே உமக்கே ஆராதனை
உம்மையன்றி எனக்கு ஆறுதல் இல்லை நீரே என் ஆறுதல்
பசுமையான மேய்ச்சல் உள்ள இடத்திலே என்னைச் சேர்ப்பீர்
அமர்ந்த தண்ணீர் தடத்திலே என்னை அழைத்துச் செல்வீர்
ஜீவத்தண்ணீர் உம்மிடம் உண்டு அதையே நான் விரும்புகிறேன்
தேவா உம்மையே நான் நேசித்து மகிழ்வேன். ஆமென்.

20 JULY 2022

இனிமையான வாழ்வைத் தந்த தேவனே
இன்னல்களை மின்னலாய் மறைந்து போகச் செய்தீர்.
கண்களுக்கு மறைவாய் காண்கின்ற தேவனே
வானத்தின் ஆஸ்திகளை அலங்கரித்து தீர்ப்பளித்தீர்.
வல்லமையின் அழியாத கர்த்தாவே இயேசுவே
முன்னான உலகத்தையும் பாவத்தையும் அகற்றினீர்.
மரணமும் இறப்பும் பரலோகத்தை தொடுப்பதில்லை
வாக்குகள் கொண்ட அவர் உண்டே அவர் காரியனைத்
என் ஆவியை அவர் பரலோகத்திலே சேர்க்கிறவர்.
தன் ஜீவனைத் தந்த இயேசு என்னை அழைக்கிறார்.
அழகான வாசல் என் கண்களுக்குத் தெரிகின்றது.
நிழல்தனில் வாசமாயிருக்க இயேசுவே விரும்புகிறேன்
உம் வஸ்திரத்தைத் தொட்டால் போதுமே நான் சுகமாவேன்
அம்சமான பங்கை நான் உம்மிடத்திலே பெற்றுக் கொள்வேன்
ஆதாம் போல உம் கையில் தவழ்ந்த என்னையும்
ஏதேன் தோட்டத்திலே பாவம் செய்யாதபடி காத்துக்கொள்ளும்
நன்மைத் தீமைகளை அறிந்துக் கொண்டேன்.
நன்மைச் செய்யவே தீவிரம் கொண்டேன்.
ஆபிரகாமைப் போல அல்லவே அதனிலும் மேலாய் விசுவாசிக்கிறேன்
ஏனெனில் நீர் என்னை கானான் தேசத்திலே சேர்த்திடுவீர்.
யாக்கோபைப் போல போராட்டங்களை கடந்துவரச் செய்தீர்
முக்கியஸ்தனாய் மேய்ச்சலிலே என்னைச் சேர்த்துக் கொண்டீரே.
இராஜாவே நீரே என்னை ஆளும் ஆண்டவனாய் இருப்பீராக.
இயேசுவே நீரே என்னை உமக்குள் காத்துக் கொள்ளும்
என் உடலும் உள்ளமும் உம்மையே தியானிக்கின்றது
என் புத்தியும் அறிவும் உமக்கே ஏங்கித்தவித்து நிற்கின்றது.
உண்மை அறிகின்ற அறிவிலே என்னை வளர்த்திடும்
உம்மையே நோக்கி காத்திருக்கச் செய்திடும்.
பரிபூரணங்கள் யாவும் பரலோகத்திலிருந்து எனக்குத் தாரும்
நீதியும் நியாயமும் என்னிலே நீர் நடப்பிக்கும்
வாழ்நாளில் முழுவதும் உம்மையே நோக்கி தாழ்த்திடுவேன்
ஏழை நான் என்னைத் தெரிந்துக்கொண்டதற்காய் நன்றி சொல்வேன்
உமது சேவையில் நான் வந்து தங்கச் செய்திடும்
தமது பேரன்புமதையில் என்னை தினம் தினம் நனைத்திடும்
உலகம் வேண்டாம் பரதேசம் எனக்கு வேண்டும்
விலகாமை எண்ணும் பாடம் என் இதயத்திற்கு வேண்டும்.
இயேசுவே நீரே என் தெய்வம் நீரே என் தகப்பன். ஆமென்.

21 JULY 2008

பரிசுத்த ஆவியே, என்னுடைய துணையாளரே
அன்போடு கூடவே இருப்பவரே உம்மை துதிக்கின்றேன்.
மகிமையின் தேவனே பரலோகத்தை எனக்கு காட்டிடும்
தேவதூதர்கள் இறங்குவதையும் ஏறுவதையும் காணச்செய்திடும்
இஸ்ரவேலின் தேவன் யெகோவா என்னுடைய தேவனாயிருக்கிறார்.
மகிமையைக் கண்டடைந்த தேவனே வாழ்த்துகின்றேன்
என் இராஜா நான் தேடுகின்றேன் என் கண்கள் ஏங்கிடும்பொழுதும்
என் தேசத்திலே கர்த்தரே உம்முடைய வெளிச்சம் உதிக்கட்டும்
நீரே என் தேவனாயிருக்கின்றீர் நீரே என் வழிகாட்டியானீர்
உம்மாலே என் அசுத்தங்களை புதுப்பித்துக்கொண்டே இருக்கின்றீர்
நீர் என் மேல் வைத்த கிருபை பெரியது அது உயர்ந்தது
தாழ்வினில் இருந்த என்னை உயர்த்தி வைத்தவர் நீரே
என் தேசம் உம் நாமத்தை துதிக்கக் கொண்டவர்களாக மாறட்டும்
என் தேசம் உம்மையே ஆராதிக்கச் செய்திடும்.
இத்தினத்திலே புதிய எழுப்புதலை இவ்வுலகம் கண்டடையட்டும்
தேவா உம் கிருபைகளை இவ்வுலகத்தின் மேல் பெருகச்செய்யும்
கிருபையின் மேல் கிருபை கொண்ட என் இயேசு ராஜா
விசுவாசத்தோடே உம்மை ஏற்றுக்கொள்ள இவ்வுலகத்திற்கு பதில் செய்யும்.
அன்பவரே நான் ஆராதிக்கும் போது கட்டுகளிலிருந்து விடுதலையைத் தந்திடும்
இயேசுவே நான் உம்மை ஆராதிக்கும் போது ஒரு பெரிய அற்புதத்தை செய்திடும்
அப்பா பிதாவே நான் ஆராதிக்கும் போது அதிசய அடையாளங்களை செய்திடும்
ஆவியானவரே நான் சுவிசேஷம் சொல்லத் தொடங்கும்போது அபிஷேகம் படட்டும்
தேவனே என்னில் உம்முடைய பரிசுத்த இராஜ்ஜியம் தொடர்ந்து இருக்கட்டும்
அப்பா பிதாவே உம்முடைய இராஜ்ஜியம் இறங்கி வரட்டும்
நான் அழைக்கும் போதெல்லாம் உம் இராஜ்ஜியம் இறங்கி வருவதாக.
நான் நினைக்கும் போதெல்லாம் உம் இராஜ்ஜியம் இறங்கி வருவதாக.
என் கண்கள் மூடும் பொழுதெல்லாம் உம்மை தரிசிக்க செய்வீராக
என் கண்கள் திறந்திருக்கும் வேளையிலெல்லாம் அற்புதங்கள் நடப்பதாக.
இராஜா உமது வல்லமைகள் என்றைக்கும் குறைந்து போகவில்லை.
உம்முடைய உயிர்த்தெழுதலின் மகிமை என்றைக்குமே மாறிப்போவதில்லை
உம்மை வாழ்த்தி போற்றி துதித்து ஆராதிக்கின்றேன்
உம்மையே ஜீவனுள்ள தேவன் என்று அறிக்கை செய்வேன்
மேய்ப்பனைத் தொடரும் ஆட்டைப்போல நாளும் உம்மை தொடருவேன்
மேய்ப்பனே உம்மையே நான் என்றும் ஸ்தோத்தரிப்பேன்.
நீதியின் சூரியன் என் தலைமேல் உதிக்கச் செய்யும்
என்னிலே உம் நியாயத்தீர்ப்பை செய்யாதிரும்.
இயேசுவே உம்மை இப்பொழுதே அறிந்துக்கொண்டேன். அல்லேலூயா. ஆமென்

22 JULY 2008

என் தேவனே என் இராஜனே உம்மை எனக்கு பிடிக்கும்
பசியாய் இருக்கும் மனிதன் உணவைக் கண்டு புசிப்பதுபோல இஷ்டம்
உம்மேல் எனக்கு எப்படி இப்படியொரு அந்நியோன்யம்
ஆண்டவரே அறிந்துக்கொண்டேன் உம்முடைய அன்பை புரிந்துக்கொண்டேன்
உம்மேல் எனக்கு அப்படியொரு இஷ்டம் அது தீராது
இராஜா நீர் எங்கே இருக்கின்றீர் உம் முகத்தை நான் காண வேண்டும்
நான் இஷ்டப்படும் என் இயேசுவைக் காண வாஞ்சிக்கிறேன்
நான் யாருக்காய் காத்திருக்கின்றேனோ அவரைக் காண வேண்டுகிறேன்
பிதாவே உம்மை இயேசுவின் மேலாய் என்னிலே வெளிப்படுத்தும்
என் தேவன் நீர் ஒருவேளை எலக்ட்ரான்? புரோட்டானோ? நியூட்ரானோ?
நான் அறியேன். என்னைச் சூழ்ந்து உள்ளவர் நீர் தானே ஐயா.
இவ்வுலகின் தீராத தாகம் உம்மிடத்திலே இருக்கும் என உணர்கிறேன்.
ஜீவனுள்ள யாவிலுமுள்ள செல்களின் செயல்பாட்டிலும் நீர் உள்ளீர் என்று அறிகிறேன்
மரம், செடி, கொடிகள் யாவிலும் உம்முடைய அசைவுகள் உள்ளதே!
மனிதன், மிருகங்கள், பறவைகள் யாவிலும் உம்முடைய செயல் உள்ளதே!
இறைவா, உமது ஞானத்தை எனக்கு வெளிப்படுத்தும்!
இவ்வுலகின் இரகசியங்களை எனக்கு வெளிப்படுத்தும்!
பரலோகம், பாதாளம் இவைகளை எனக்கு காண்பித்திடும்.
என்னுடைய தேவனே நீரே பெரியவர் என்று அறிவேன்
உம்மை அறிந்து கொண்டால் எல்லா ஞானத்தையும் நான் பெற்றுக்கொள்வேன்
உம்மை இன்னும் அறியவில்லையே, உம்மை இன்று காணணுமே
உமக்குள்ளே மறைந்திருக்கும் ஞானத்தை கண்டடைய உதவி செய்திடும்.
உமக்கே நான் நன்றி நினைப்பேன் என்றும் ஆராதிப்பேன்.
வாழ்த்துதல்களோடு உம்மை ஆலயத்தில் நான் நுழைவேன்.
என்னுடைய துதியில் உம்மை மேன்மைப்படுத்தி ஸ்தோத்தரிப்பேன்.
என் ஜீவனுள்ள தேவனே என் உயிரிலும் மேலான இயேசுவே
எப்படியிருந்த என்னை இன்றைக்கு எப்படி மாற்றியுள்ளீர்
தேவன் எங்கே! கடவுள் எங்கே! ஆண்டவர் எங்கே! இறைவன் எங்கே!
என்று தேடி அலைந்துக் கொண்டிருந்த என்னை
இதோ, நானே மெய்யான தேவன். நானே வழியும், சத்தியமும், ஜீவனும்
என்று சொன்ன இயேசு, அவரை எனக்கு தேவனாய் வெளிப்படுத்தினார்
உம்மையன்றி எனக்கு வேறு தெய்வம் உண்டாகியிருக்க வேண்டாம்
நீரே எனக்கு பெருமானவராய் இருந்தீர் எப்போதும் இருக்கிறீர்
வாழ்க வாழ்க என்று உம்மை வாழ்த்திப் போற்றுகிறேன்.
உம்மையன்றி எனக்கு ஒன்றும் வேண்டாம் நீரே போதும்.
வாழ்த்துதல்களோடு உம்மை ஸ்தோத்தரிப்பேன்
நீரே என் தேவனாய் என்றென்றும் இருப்பீராக. ஆமென்.

ஆண்டவரே, என் இஷ்டம் போல நான் வாழ விரும்பவில்லை.
என் மாம்சம் போக நினைக்கும் இடத்திற்கு நான் போக விரும்புவதில்லை
என் சிந்தனைகள் செய்ய நினைப்பதை நான் செய்ய விரும்பவில்லை.
இறைவா, ஆவியின் படி நடக்கவும் உம் வார்த்தையின் படி வாழவும்
இயேசுவே உமது சிந்தனைகளின் படி, போதகத்தின் படி இருக்கவே விரும்புகிறேன்
என் கர்த்தரே, உம்மையல்லாமல் என் வழிகள் தொலையும்
உம் வழிகளில் ஜீவன் இருக்கின்றது உம் பாதையில் வெளிச்சம் உள்ளது
இறைவா, உமக்கு பயந்து, இருக்கும் கொஞ்சநாளிலும் வாழ ஆசைப்படுகிறேன்.
இயேசுவே உமக்கே உகந்த காணிக்கையாக என்னை மாற்றிடும்.
என்னுடையவைகள் எல்லாம் உம்மை மேலாக கொண்டிருக்கட்டும்.
வாழ்க்கை உமக்கு ஒப்புக்கொடுக்கின்றேன் என் பழக்கத்தை நீர் தீர்த்திடும்
இராஜ்யம் இப்பூமியில் இறங்கி வரட்டும் ஜனங்கள் அதை அனுசரிக்கட்டும்
எத்தனையோ வாழ்க்கை உண்டு, பரிசுத்த வாழ்க்கையை எனக்குத் தாரும்.
எத்தனையோ வழிகள் உண்டு, பரிசுத்தப் பாதையை எனக்குக் காட்டிடும்
எத்தனையோ ஜனங்கள் உண்டு, பரிசுத்த ஜனங்களை நீர் உண்டாக்கிடும்
இறைவா, என்னிலுள்ளவைகள் யாவிலும் உமது பரிசுத்தம் விளங்கட்டும்
என்னிலுள்ள எண்ணெய் குறைந்து போகாமலிருக்கட்டும்
என்னை அபிஷேகித்த அபிஷேகம் மாறி போகாமலிருக்கட்டும்
என்னை படைத்த என் இயேசுவே உம் கிருபை என்மேல் என்றும் இருக்கட்டும்
என்னை வனைந்த என் பரிசுத்த தகப்பனே கறைகளை அகற்றிடும்
உம்முடைய விதைகள் என்னில் விதைக்கப்பட்டு வளர்ந்து கனிதரும் மரமாகணும்
உம்முடைய பரிசுத்த வித்துக்கள் என்னிலிருந்து எழும்பட்டும்.
இறைவா, நான் நல்ல பங்கைத் தெரிந்துக் கொண்டேன்
இயேசுவே நீரே என் பங்காளர் நீரே என் நண்பரானீர்
என் அவசரமுள்ள தேவனே எனக்கு ஜீவனைக் கொடுத்த இராஜாவே
உம்மையே என்னை முழு இருதயத்தால் வாஞ்சித்து தேடுகிறேன்
என்னுடையவைகள் எனக்கு சொந்தமானதல்லவே உமக்கே சொந்தம்
உம்மையன்றி எனக்கு ஆசை வேறு இல்லை நீரே வேண்டுகிறேன்
தேவனே ஐயனே உம்முடைய வேதத்தை இன்றைக்கு ஒரு வாலிபனிடத்தில்
சொன்னேனே! அவனுக்காய் ஜெபிக்கிறேன்! சுகத்தைத் தாரும்.
ஊனமான அந்த ஆவியை உம் வல்லமையான கரம் தொடட்டும்
உம்மைக் குறித்த விதையை விதைத்தேன் இன்று அவனிடத்தில்
அது வளர உம்மை நோக்கிப் பிரார்த்திக்கின்றேன்
உம்முடைய சுகமாக்கும் கரம் அவனை தொடுவதாக.
பேசிடும் இன்றைக்கே நீர் பேசிடும் அவன் சுகமாக உதவிடும்.
இறைவா, ஒரு அற்புதம் இந்த தேசத்தை கலக்கிடும்
உடைத்து விடும். உருமாற்றும் அவனை அற்புதம் செய்யும். ஆமென்.

23 JULY 2008

தெய்வமே உம்மை வாழ்த்த வார்த்தைகள் போதாமல் இருக்கின்றன
உம்மைப் போற்ற புதிய புதிய வார்த்தைகளைத் தந்திடும் இறைவா,
என்னுடைய எழுத்திலும் என் பேச்சிலும் உம்மை உயர்த்தும் வார்த்தைகள் இப்போது
எல்லையில்லா உமது அன்பை எழுதிடவே எழுத வார்த்தைகள் வேண்டுமே.
இறைவா, பல மொழிகளில் உம்மைக் குறித்து எழுத உதவி செய்திடும்
என்னுடைய வாழ்நாளில் உம்மை உயர்த்தும் துதிகள் என் வாயில் இப்போதும்
எல்லாவித பலிகளோடும் கூட உம் ஆலயத்தில் பிரவேசிக்கச் செய்திடும்.
இறைவா, ஞானத்தை அறிகின்ற அறிவாலே என்னை வளர்த்திடும்
என் சுயபுத்தியின் மேல் நான் நம்பிக்கை வைக்காமல் இச்சை செய்யும்
நீர் தரும் ஆலோசனையின் படி என்னை நடத்திச் செல்லும்
உம்முடைய வசனங்கள் என் இருதயத்தில் பாதுகாக்கப்பட்டு இருக்கட்டும்
உம்முடைய வார்த்தைகள் என் இருதயத்தில் என்னை சோதித்து அறியட்டும்
உம்முடைய அக்கினியான வார்த்தைகள் என்னை சுத்திகரிக்கட்டும்
உம்முடைய தேனைப் போன்ற வார்த்தைகள் என்னை தெளிவுள்ளவனாக மாற்ற
உம்முடைய பாலைப்போன்ற வெண்மையான வார்த்தைகள் என்னை பரிசுத்தமாக்க
உம்முடைய இருபுறமும் கருக்குள்ள பட்டயம் என் தேகத்தை வளைப்பதாக
உம்முடைய ஜீவனுள்ள வார்த்தை எனக்கு நித்திய ஜீவனை தருவதாக.
இறைவா, உம்மைப் போல எனக்கு பரிசுத்தத்தைக் கட்டளையிடும்,
பரிசுத்த ஆவியானவரின் பள்ளியில் என்னை பாடம் கற்க செய்யும்.
தேவனே, உம்மைப் போல என்னையும் சகோதரர்களையும் பேசும்
வாழ்வைத் தரும் வசனங்கள் என் வாயில் இருந்து புறப்படட்டும்
விதைக்கப்பட போகும் கோதுமை மணிக்குவியலைப் போல
முப்பது அறுபதாகட்டும். அறுபது நூறாகட்டும், இது பெருகட்டும்
தேவனே, என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கிறேன்.
கர்த்தா என்னை தெரிந்துகொள்ளும் தாங்கிக்கொள்ளும்
இயேசுவே என்னை எடுத்துப் பயன்படுத்தும் பண்படுத்தும்
நீரே என்னை ஆளுகை செய்ய வேண்டும். நடத்த வேண்டும்
உம்மையன்றி எனக்கும் என் தலைமுறை தலைமுறைகளுக்கும்
வேறே தெய்வம் உண்டாகி இருக்க வேண்டாம்.
ஒருவேளை காலம் இன்னும் நெருங்கி வராத பட்சத்தில்
ஆபிரகாமின் சந்ததியைப் போல என் சந்ததியையும் மாற்றிடும்.
இறைவா, உம்மை நான் மகிமைப்படுத்தி போற்றித் துதிக்கிறேன்
ஆபிரகாமோடு பேசின என் தேவன் என்னோடும் பேசிடும்
எலியாவோடு இருந்த என் தேவன் என்னோடும் கூட இரும்
தாவீதோடு இருந்த என் கர்த்தர் என்னோடும் இருந்திடும்
தீர்க்கதரிசிகளோடு பேசின என் தலைவன் என்னோடும் பேசிடும்
இயேசு உம்மை நோக்கி காத்திருக்கின்றேன். வாரும். ஆமேன்.

23 JULY 2008

தெய்வமே, மகிமையின் தெய்வமே நீர் வாருமே
என் கண்கள் காத்துக்கொண்டே இருக்கிறது.
உம்மையே நினைவுகளால் இதயம் எப்போதும் இயங்குகின்றது.
என் இதயத்திலிருந்து பொல்லாங்கானவை யாதும் புறப்படாமல் இருப்பதாக.
என் இதயம் நன்மைகளை வெளிப்படுத்துவதாக.
என் இதயத்தின் பாவ அசுத்தங்களை மாற்றிப் போடும்.
என் இதயத்தின் நினைவுகளை தேவன் நீரே செம்மைப்படுத்தும்.
என் இதயத்தின் கடினத்தை நீக்கி சதையை வெளியாக்கும்
என் இதயம் உம்மையே சார்ந்து இயங்குவதாக.
என் இதயம் உமக்காய் பொங்கிக்கொண்டிருப்பதாக.
தேவனே, என் கண்களை எல்லாவித அசுத்தத்திற்கும் நீங்கலாக்கிடும்
இயேசுவே என் மாம்ச கண்களை ஒதுக்கி ஆவியின் கண்களை திறந்திடும்
இயேசுவே என் மனக்கண்கள் இன்றே திறக்கப்படட்டும்
இயேசுவே என் அன்பின் கண்கள் இன்றே திறக்கப்படட்டும்
இயேசுவே என் உம்மைப்பார்க்கும் கண்கள் இன்றே திறந்துக்கொள்ளட்டும்
அப்பா, உம்மை நோக்கிப் பார்க்கின்றேன் என்னை உதவிடும்
ராஜா, உம்மையே பார்த்துப் போற்றுகிறேன் என் ஜெபம் கேளும்.
கர்த்தரே வாழ்த்தவென்று வாழ்த்துகிறேன் அதுவே என் பாக்கியம்
தேவனே எப்படி நான் பாடுவேன்? எப்படி நான் துதிப்பேன்?
மீண்டும் மீண்டும் அதே வார்த்தைகளை சொல்லுகிறேன்,
இருந்த போதிலும் உம்மைத் துதிக்க எழுகிறேன் என்பதில் சந்தோஷம்
ஆண்டவரே, புதிய புதிய பாஷைகளில் உம்மைத் துதிக்கவும்
புதிய புதிய மொழிகளில் உம்மை ஆராதிக்கவும்
புத்தம் புதிய மலர்களாய் ஜெபங்கள் பூக்கவும்
இன்னும் பல மொழிகளிலும் உம்மையே புகழ்ந்திடவும்
ராஜா, இயேசு ராஜா, உம்மை என் தெய்வமாக ஏற்றேன்.
நீர் என்னைத் தேடிலே மறியாமாயாகும் அதை நான் விரும்புகிறேன்
நீர் என்மேல் கண்வைத்து பாதுகாத்திடும் நான் உம் பிள்ளை
நீர் என்னை மறந்துவிடாதேயும் நான் தொலைந்து போவேன்
நீர் என்னை விட்டுவிடாதேயும் பாவத்திலே மூழ்கிப் போவேன்
நீர் என்னை தள்ளிவிடாதேயும் நான் நொறுங்கிப் போவேன்
நீர் என்னை துப்பிவிடாதேயும் நான் கரைந்துப் போவேன்
நீர் என்னை தனிமையாக்கி விடாதேயும் நான் மரித்துப் போவேன்
நீர் என்னை பரீட்சை பாராதேயும் என் ஞானம் குறைவானதே
இயேசுவே என்னை கழுவியும் அபிஷேகித்திடும்
என்னைச் சுற்றி நீதியின் சூரியன் பிரகாசிக்கட்டும்
என் இயேசுவே நீரே என்னில் வாழ்ந்திடும். அல்லேலூயா. ஆமென்

23 JULY 2008

என் ராஜாதி ராஜனே கர்த்தாதி கர்த்தரே தேவாதி தேவனே
உம் இரக்கத்தின் ஐசுவரியத்தினால் என்னை மீட்டுக் கொண்டீர்
நீர் மாத்திரமே எனக்கு சொந்தமானவராய் இருக்கின்றீர்
உம்மிடத்தில் இருக்கும் சமாதானம் என்னிலும் இருப்பதாக
எப்பொழுதும் என்றென்றும் உம் நாமம் மகிமையடைவதாக.
இராஜா, என்னை தெரிந்துக்கொண்ட இயேசுவே உமக்கு நன்றி
கர்த்தரே என்னை உமக்காய் அழைத்தீரே உமக்கே நன்றி
உம்முடைய கிருபை என்றென்றும் என்னுடன் தங்கியிருப்பதாக.
உம்முடைய ஆவியானவர் என்னிலே அணையாமல் இருப்பாராக.
என்னுடைய வாழ்விலே நீரே பெரிய தேவனாய் இருக்கின்றீர்
ஒரு காலத்தை தேவனைத் தேடி அலைந்த என்னை
உம் கிருபையால் உம்மை மெய் தேவனாக என்னில் வெளிப்படுத்தினீர்
உம்முடைய அன்பும் தயவும் என்னிடத்தில் இருப்பதாக
உம்முடைய பொறுமையும் சாந்தமும் என்னில் பொங்கி இருப்பதாக.
தேவாதி தேவனே உம்மையல்லாமல் எனக்கு யாருமில்லை
உமக்கே எல்லாமும் சொந்தமாகி இருக்கின்றது.
மறைவான ஆவிகளை பகுத்தறியும் அறிவை எனக்கு தந்தருளும்
ஆவிகளை அதட்டி வெளியேற்ற உம் நாமத்தை எனக்குத் தாரும்
நீரே என் இயேசுவென்பேன் என் உயர்ந்த தேவன் நீரே நீர் மாத்திரமே
மகா கிருபையும் இரக்கமும் உம்மிலிருந்து இப்புவி ஜனங்களுக்கு வருவதால்
எங்கள் மீது கோபமாயிராதேயும், அன்புடன் எங்களை தாங்கும்
பிதாவானவரே உமக்கே நான் ஆராதனை செலுத்துகின்றேன்.
என்னுடையவைகளில் நீரே முதலானவராக இருக்க வேண்டுகிறேன்
மகிமை நிறைந்தவரே, உமக்கே ஆராதனை ஏறெடுக்கிறேன்
உன்னதங்களில் அமர்ந்திருக்கின்ற என் தேவாதி தேவனே
உம்மைத் தேடித் தேடி என் கண்கள் அலைந்து திரிகின்றது
என்னை நோக்கிப் பார்த்திடும் நான் தாகமாய் இருக்கிறேன்.
அப்பா, பிதாவே அன்புள்ள தேவனே உம்மை வாழ்த்துகிறேன்.
இயேசுவே நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர் எங்களை ஆசீர்வதிப்பவர்
உம்மிலே நான் பூரித்துக்கொள்வேன் தப்பிப் பிழைப்பேன்
பூமி நிலைமாறிப் போனாலும் பர்வதங்கள் பெயர்ந்துப் போனாலும்
நான் ஒன்றுக்கும் அஞ்ச மாட்டேன், நீர் என்னை பாதுகாப்பீர்.
வெள்ளம் என்மேல் புரண்டாலும் நான் பயப்பட மாட்டேன்
பேழையில் நீர் வந்து என்னை தூக்கி எடுத்து அமரச்செய்வீர்
அக்கினியில் என்னை தள்ளினாலும் நான் பயப்பட மாட்டேன்
அக்கினி தேவன் என் இயேசுவானிடத்தில் நான் சேர்வேன்.
என் இயேசு என்னை அணைத்துக்கொள்வார். அல்லேலூயா. ஆமென்.

21 JULY 2008

என் இரக்கம் நிறைந்துள்ள மகா தேவனே உம்மைப் போற்றுகிறேன்.
என் வாழ்நாளில் நான் என்றைக்கும் உம்மை மறவேன்
என் வழிகளில் உம் வெளிச்சம் என்றென்றைக்கும் இருப்பதாக.
கிருபாநிதி இராஜா நீரே எந்தன் வெளிச்சமாய் இருக்கின்றீர்
என் ஆபத்துக் காலத்தில் என்னைக் காப்பாற்றி பாதுகாத்தீர்
என் சிக்கட்டுகளிலிருந்து என்னை விலக்கிக் காப்பாற்றினீர்
என் இருளினை வெளிச்சமாக்கி பகலை தீபமாக்கினீர்
அன்பரே, உம்முடைய கிருபை என்றைக்கும் இருப்பதாக.
உம்மை மறவேன் நான். என் இயேசையா உம்மை மறவேன் நான்.
என் தாய்மையைப் போல் என்னை நினைத்தவர் நீர்.
நான் கருப்பையிலிருக்கும் போது என்னை எடுத்து தாங்கி வைத்தவர் நீர்
நான் தொட்டிலிலிருக்கும் போது கைப்பிடித்து தாங்கி பாதுகாத்து வைத்தவர் நீர்
உம்முடைய தயவினால் உம் கண்களில் கிருபை கிடைத்தது.
இயேசு மகா தேவனே, உம்மை நான் வாழ்த்திப் பாடுகிறேன்.
அவை எல்லாவற்றிலும் தகுதியானவர் நீரே நீர் இயேசுவே.
மகிமையின் தேவனே என்மேல் இறங்கி வாரும்!
பரிசுத்தப் படுத்தி இப்பாவங்களை அக்கினியால் சுட்டெரித்திடும்.
தேவனே உம்முடைய நியாயம் மலைப் போன்றதாக இருக்கின்றது.
நீரே வழி, சத்தியம், ஜீவன் என் புகலிடமாய் ஆனீர்
உம்மையன்றி எனக்கு வேறொன்றும் இரட்சிப்பு இல்லை.
தேவனே, உம்மை வாழ்த்தி நான் சந்தோஷத்தோடு பாடுகிறேன்.
அன்பு நிறைந்தவரே என் கர்த்தரே உன்னதரே காலை ஆராதனை
என் முழங்கால்கள் உமக்கு முன்பாய் பணிந்து கும்பிடுவதாக
கேருபீன்கள் சேராபீன்கள் போற்றும் எங்கள் பரிசுத்தரே
நானும் என் ஜனங்களும் உம்மையே போற்றுகின்றோம்.
நானும் என் உலகமும் உம்மையே ஆராதிக்கின்றோம்.
நானும் என் வீட்டாரும் உம்மையே நேசிக்கின்றோம்.
நானும் என் நண்பர்களும் உம்மையே வாழ்த்துகின்றோம்.
என் இயேசு ராஜனே ஜீவனின் அதிபதியே
நான் தேவனாகிய உம்முடைய இராஜ்யத்தையே தேடுகிறேன்
இராஜா, உம் இராஜ்யத்தை எனக்கு காட்டியருளும்
பரலோக இராஜ்யத்தின் ஒரு பக்கத்தையாவது காட்டிடும்.
அப்பா, எந்தன் பரிகாரியே எனக்காய் நீர் மரித்தீர்
எனக்காய் நீர் உயிர்த்தீர் எனக்காய் மீண்டும் வருவீரே
இன்றைய பொழுதின் ஒரு சாதனை இயேசுவை சந்தித்தது.
இன்றைய மிகப்பெரிய தேவன் தந்த பரிசு பரிசுத்த ஆவியானவர்.
என் இயேசு என் இயேசு உம்மை எனக்கு மிகவும் பிடிக்கும். ஆமென்.

24 JULY 2008

என் ஆத்துமாவே நீ கர்த்தரையே என்றென்றைக்கும் ஸ்தோத்தரி
என் உள்ளமே நீ இயேசுவையே என்றென்றைக்கும் துதித்திடு
என் ஆவியே நீ பரிசுத்த ஆவியானவரையே என்றென்றைக்கும் சார்ந்திடு.
என் மாம்சமே நீ பரிசுத்தமாய் என்றென்றைக்கும் வாழ்ந்திடு.
என் கண்களே நீங்கள் பரிசுத்தமானதையே என்றென்றைக்கும் பார்த்திடு.
என் செவிகளே நீங்கள் தேவ வசனத்தையே என்றென்றைக்கும் கேட்டிடுங்கள்
என் நாவே நீ தேவ நாமத்தை என்றென்றைக்கும் வைத்திடு
என் வாயே நீ பரிசுத்தமான வார்த்தைகளையே என்றும் வெளியிடு
என் நாசியே நீ பரிசுத்தரின் வாசனை சுவாசித்து ஜீவித்திடு.
என் கைகளே நீங்கள் தேவனுக்காய் செயல்பட்டு [illegible].
என் கால்களே நீங்கள் இயேசுவின் நாமத்திற்காய் நடந்திடுங்கள்.
என் தோள்களே நீங்கள் தேவ மகிமையை என்றும் வெளிப்படுத்துங்கள்
என் நரம்புகளே நீங்கள் தேவ வல்லமை தீண்டுதல்களையே உணர்ந்திடுங்கள்
என் எலும்புகளே நீங்கள் பரிசுத்தரின் நாமத்தில் வலுப்பட்டு இருங்கள்
என் இரத்த நாளங்களே இயேசுவின் நாமத்தில் தூய்மையாய் செயல்படுங்கள்
என் இருதயத் துடிப்புகளே இயேசுவின் நாமத்தில் சீராய் செயல்படுங்கள்
என் இரத்தமே உன்னிலுள்ள அணுக்களெல்லாம் இயேசுவினால் வெள்ளோட்டம்
என் உடலிலுள்ள எல்லா உறுப்புகளே இயேசுவின் சொல்படி செயல்படுங்கள்
என்னிலுள்ள யாவையுமே, இயேசுவின் நாமத்தினைப் போற்றுங்கள்.
என் ஜீவனே நீ பயப்படாதே இயேசு நித்திய ஜீவனைத் தருகிறார்
என் ஆவியே நீ கலங்காதே இயேசு நித்திய இடத்தை தருகிறார்
என் உள்ளமே நீ இளையாதே இயேசு நித்திய சாம்ராஜ்யத்தை தருகிறார்
என் ஆத்துமாவே நீ அதிராதே இயேசு உன்னை சேர்த்துக்கொள்வார்
என் எலும்புகளே நீங்கள் உடைந்துபோகாதிருங்கள் இயேசு கட்டுவார்.
என் இயேசுவே என் இயேசுவே உம்மில் நான் மறைந்தேன்
இயேசுவே உமக்குள் நான் மகிழ்ந்துபோக வாஞ்சிக்கிறேன்
இயேசுவே நன்றி சொல்கிறேன் நான் தினமுமாய்,
என் ஜீவன் உள்ளதோறும் உம்மையே ஆராதிக்கின்றேனே.
என் ஆத்துமா தாகத்தோடு உம்மை மேன்மேலும் போற்றுவேன்.
என் வழிகளை செவ்வையாக்கும் பாதையை காக்கும்
இன்றும் என்றைக்கும் உம்மோடு சேர்ந்திட அழைப்படுகிறேன்
தினம், உம் கிருபையை மேன்மேலும் உயர்த்திடும்
உமது மகிமை எங்களில் தந்து எங்களை நிர்மூலப்படுத்த
இதோ வருகிறார் என் இயேசு ராஜா அவரே சத்தியம்
எனக்கு பிடித்த என் நண்பர் என் உடன் வரும் நேசர்
இயேசுவே உம்மையே நான் சார்ந்துக்கொள்வேன்.
உம்மில் எனக்கு நித்திய ஜீவன் உண்டு. அல்லேலூயா. ஆமென்.

26 JULY 2008

இறைவா, மீண்டும் ஒரு நாளை என் வாழ்வில் கூட்டியுள்ளீர். நன்றி.
என்னோடு இருந்த நண்பன் இன்று என்னோடு இல்லை.
என்னோடே இருந்த நண்பர்கள் இன்று என்னை விட்டு பிரிந்தனரே.
என்னோடு கூட என்றென்றும் இருப்பவர் இயேசுவே நீரே.
உமக்கே மகிமை உண்டாவதாக உமக்கே கனங்கள் உண்டாவதாக.
உம்முடைய வசனங்களுக்கு என் மனமார்ந்த ஸ்தோத்திரம்
உம்முடைய ஸ்பரிச தொடுதல்களுக்காய் என்றும் ஸ்தோத்திரம்.
இயேசுவே உமக்கே ஆராதனை யை ஏறெடுக்கின்றோம்.
மாறாத நல்ல மேய்ப்பன் என் இயேசப்பா நீரே நீர் மாத்திரமே
என்னுடைய மகத்தான இறைவனானவர் நீரே நீர் மாத்திரமே
என்னுடைய வழியில் எனக்கு வெளிச்சம் நீரே நீர் மாத்திரமே
என்னுடைய பாதையில் எனக்கு தீபம் நீரே நீர் மாத்திரமே.
என்னை அக்கரைக்கு அழைத்துச் செல்பவர் நீரே நீர் மாத்திரமே.
என்னை பசுமையான மேய்ச்சலுக்குள் கொண்டு சேர்ப்பவர் நீரே
இறைவா, உம்முடைய வழிகளை எனக்கு போதியும்
இயேசுவே, உம்முடைய கற்பனைகளை எனக்கு கற்பியும்
இயேசுவே, உம்முடைய கட்டளைகளை கைக்கொள்ள உதவிடும்
இயேசுவே, உம்முடைய உடன்படிக்கையை எனக்காய் நினைவு கூரும்.
இராஜா உம்மை நித்தியமாய் ஆராதிக்க எனக்கு உதவிடும்.
மகிமைக்கு பாத்திரரே, அடிமை கிரீடா, ஆட்கொள்ளும்.
நீர் சொன்னால் நான் செய்வேன் நீர் சொன்னால் மாத்திரம் செய்வேன்
நீர் எனக்கு காட்டும் வழியில் நான் அழகாய் நடந்து செல்வேன்
நீர் எனக்கு போதனை செய்யும்படி என் வாழ்வை மாற்றிக்கொள்வேன்
ஜீவனுள்ள தேவனே ஜீவத்தண்ணீரே நான் உம்மில் மூழ்குவேன்
என் ஜீவனின் அதிபதியே என் ஜீவ தந்தையே ஜீவனுள்ளவரே
உம்மை புகழ்பாட்டால் மகிமை செய்து ஆராதிப்பேன்
உமக்காய் என்னை நான் தகுதிப்படுத்திக் கொள்ள உதவி செய்யும்
இறைவா, என்னுடைய மெய்யான தேவனே உம்மை நேசிக்கிறேன்.
எனக்கு உமது இரகசியங்களை வெளிப்படுத்திடும்
எனக்கு நீர் இருந்த தரிசனங்களை காட்டிடும்
எனக்கெதிராய் பிசாசு விரித்த வலைகளை தகர்த்து போட்டுவிடும்
எனக்கெதிராய் எழும்பும் படைகளை நீரே பிரித்துப் போட்டுவிடும்
உம்முடைய கிருபைகளைக் கொண்டு அரண்களை கட்டெழுப்புவோம்.
தேவனே, மகிமையின் தேவனே, உம்மைப் போற்றிப் பாடுகிறேன்
உமக்கே துதி கன மகிமையை யாவையும் செலுத்துகின்றேன்
வாழ்வு தரும் வசனங்கள் யாவும் உம்மிடத்தில் உள்ளன.
வாழ்வைத் தரும் இயேசுவே உம் வசனங்களைத் தாரும். அல்லேலூயா ஆமென்.

26 JULY 2008

இயேசுவே, நான் வேதமாக மாற வேண்டும்.
ஜனங்கள் என்னை படித்து உணர வேண்டும்.
ஆண்டவரே, நான் உமது வார்த்தையாக மாற வேண்டும்
உலகம் என்னை படித்து அர்த்தம் கொள்ள வேண்டும்
பிதாவானவரே, நான் உமது அடையாளமாக மாற வேண்டும்
ஜாதிகள் என்னை படித்து உம்மை அறிய வேண்டும்.
பரிசுத்த ஆவியானவரே, நான் உமது பரிசுத்தனாய் மாற வேண்டும்.
என் மக்கள் என் பரிசுத்தத்தினால் சுகம் பெற வேண்டும்.
சத்திய ஆவியானவரே, நான் உமது சத்தியமாய் மாற வேண்டும்.
உலக பிள்ளைகள் உம் சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டும்.
நித்திய பிதாவே, நான் உமது உடன்படிக்கையாய் மாற வேண்டும்.
இவ்வுலக மக்கள் யாவருக்கும் நான் சொந்தமாக வேண்டும்
துணையாளரே நான் உமது கற்பனைகளாய் மாற வேண்டும்
மணவாளரே நான் மணவாட்டியாய் மாற வேண்டும்
ஆவியானவரே, என் மாம்சம் அறையப்பட்டு நான் மறுரூபமாகவும்
சகலத்தையும் படைத்தவரே, புது சிருஷ்டியாக என்னை உருவாக்கவும்
நான் உமது கையில் உள்ளேன் நான் உமது அடிமை.
உம்மைத் தவிர எனக்கு வேறொன்றும் நித்தியமானதை இல்லை.
நீரே என் முழுவதும் அனைத்துமாய் இருக்கின்றீர்
உம்முடைய கிருபையால் நான் சூழ்ந்துகொள்ளப் பட்டேன்.
அப்பா, எனக்கு இன்னது வேண்டுமென்று நீர் அறிந்துள்ளீர்.
தந்தையே, எனக்கு சுதந்தரமாக நீர் கொடுத்த ஆவியானவர் உண்டு.
என் தேவனே, எனக்கு கிருபையால் நீர் கொடுத்த வரங்களும் உண்டு.
என் ஆண்டவரே, எனக்கு உம் வார்த்தையால் கொடுத்த கிருபையும் உண்டு.
கனிகள் இவ்வுலகத்திற்கு பலதாய் கொடுக்க வழியும் உண்டு.
ராஜா, உம்மை நான் எப்படி பாடுவேன்,
என்ன சொல்லி நான் அழைப்பேன். நீரே போதுமானவர்.
என் தேகம் மறைந்திடும்வரையும் இவ்வுலகம் மறைந்திடும்வரையும்
நீர் வாழ்கவென்று உம்மைப் போற்றி பாடுவேன்.
உம் நாமம் உயர வேண்டும் நீர் பெருக வேண்டும்
என் நாமம் தாழ வேண்டும் நான் சிறுக வேண்டும்
என் இதயம் உடைய வேண்டும் உம் அன்பால் நிறைக்க வேண்டும்
என் கண்கள் மூட வேண்டும் என் ஞானக்கண்களை திறக்க வேண்டும்
என் மாம்சம் ஒடுங்க வேண்டும் என் ஆவி நிலைபெற வேண்டும்
என் ஜீவன் உம்மில் தாகமாய் இருக்க வேண்டும்
நாளும் என் வீட்டிலே உம்மையே சேவிக்க வேண்டும்
இயேசுவே நீரே என் வீட்டின் தலைவர், அல்லேலூயா. ஆமேன்.

27 JULY 2008

என் இயேசுவே, காலை தோறும் உம் புதிய கிருபைக்காய் நன்றி.
ஒன்றும் அறியாமல், என்ன நடக்கும் என்று தெரியாமல்
உறங்கச் சென்றேன் நேற்றைய இரவில். இன்று மீண்டும் எழுந்தேன்.
அப்பா, என் தேவையை எவ்வளவு சிறப்பாய் சந்திக்கிறீர் நீர்.
உம்முடைய கருணை எவ்வளவு அற்புதமாய் இருக்கின்றது.
வாழ்க்கையின் ஓட்டத்திலே உம்மை நான் நோக்காத பொழுது
ஒவ்வொரு நிமிடமும் உம்மையே சார்ந்திருக்க வேண்டுகிறேன்.
இறைவா, என் வழியை நீர் சீராக்கும். பாதையை நேராக்கும்.
என் நினைவுகளை அறிந்தவர் நீர் அதை பரிசுத்தமாக்கும்.
என்னுடைய தேகமெல்லாம் நீர் தங்கும் பரிசுத்த ஆலயமாகட்டும்.
இயேசுவே, உம் வழி எனக்கு பிரியமானதாய் இருக்கின்றது.
இயேசுவே, என்னை எடுத்துக் கொள்ளும்.
இந்த பாரத்தை இனி என்னால் சுமக்க முடியவில்லை
இப்பொழுதே பாரத்தை என்னை விட்டு நீங்கச் செய்யும்.
என்னுடைய இருதயத்தின் வாஞ்சையெல்லாம் நீர் நிறைவேற்றும்.
ஜீவபுத்தகத்தில் என் பெயரை ஜெய வீரன் என்றே எழுதும்,
என் கண்களில் கண்ணீரைத் தந்தவர் நீரே
அக்கண்ணீரால் உம்மை நோக்கி ஜெபிக்க வைத்தீர்.
இறைவா, என்னில் இருக்கின்ற பரிசுத்த ஆவியானவர் தீவிரமானவர்
என்னில் இன்னுமாய் பரிசுத்தம் அதிகரிப்பதாக உயர்வதாக.
வாழ்வின் பயணங்களில் நீரே என்னை அழைத்துச் செல்பவர்
இறைவா, மனிதனை நான் மெச்சிக் கொள்ளலாகாது.
எந்த மனிதனின் நினைவுகளும் என்னில் வேண்டவே வேண்டாம்
உம்முடைய நினைவுகளின் நிழலிலே ஓய்வெடுக்க வேண்டுகிறேன்.
அதிசயங்கள் செய்பவரும் நீரே, அற்புதத்தை அளிப்பவரும் நீரே
உம்முடைய மேலான கிருபைகளுக்காய் ஸ்தோத்திரம்
என்னை ஒரு அழகான பரிசுத்தப் பாத்திரமாக வனைந்திடும்
என்னை உமக்கேற்ற காணிக்கையாக மாற்றி ஏற்றுக்கொள்ளும்.
அதற்கும் என்னை ஒருக்காலும் ஆராய்ந்து கொள்ளாமலிருக்கட்டும்
பரிசுத்த வாழ்வு ஒருபோதும் என்னை விட்டு அகலாமலிருக்கட்டும்
இயேசுவை ஒருபோதும் என்னிடத்திலே காணப்பட வேண்டும்.
உலக மனிதர்களுக்கு நான் ஒளியாய் விளங்க வேண்டும்.
அனைவருக்கும், சகல பாவக்காரர்களுக்கும் வெளிச்சமாய் வாழ வேண்டும்
இயேசுவே, உம் நாமத்தினாலே யாவையும் செய்ய என்னால் கூடுமே
என் விசுவாசம் மிகவும் குறைவானதே. அதை அதிகமாக்கும்
எலியாவிற்கு இருந்த விசுவாசம் எனக்கும் வேண்டும்.
பவுலிற்கு இருந்த விசுவாசம் எனக்கும் வேண்டும் இயேசுவே. ஆமென்.

28 JULY 2008

இயேசுவே, நீரென்றால் எனக்கு மிகவும் இஷ்டம்
உம்மை நினைத்துக் கொண்டிருப்பதே எனக்குப் பிரியம்
உம்மையல்லாமல் எனக்கு வேறெதுவும் வேண்டாம் என்பேன்
உமக்காகத்தானே ஐயா நான் உயிர் வாழ்கின்றேன்
உமக்கே என்னை ஜீவபலியாக தந்து விட்டேன்
உம்மிடத்தில் ஜீவனுள்ள வார்த்தைகள் உண்டே.
உள்ளும் புறமும் தூய்மையாக்கி என்னை பரிசுத்தப்படுத்திடும்
வெல்க வெல்க என்பேன். வாழ்க வாழ்க என்று சொல்வேன்
இயேசுவே இயேசுவே என்னைத் தாங்க வாரும்
இயேசுவே என்னை உமக்கே ஒப்புக்கொடுத்து விட்டேன்
எடுத்துக் கொள்ளும் பயன்படுத்தும் ஆளுகை செய்யும்
என்னை உடைத்து உருமாற்றி உருக்கொள்ளச் செய்யும்
இனிமேல் என்னில் ஏதுமில்லை புதியதைத் தாரும்
உமக்காய் காத்திருக்கின்றேன். நீர் தினம் ஏற்றவேளைக்காய் காத்திருக்கின்றீர்
என்னோடு பேசிடும். உம் குரலை கேட்க என்னை தகுதிப்படுத்தும்
என்னோடு கூடவே இருந்திடும். அதற்காய் என்னை தகுதிப்படுத்திடும்
என்னை உம் வசனத்தால் நிறைக்கச் செய்து அதைப் பயன்படுத்தும்.
பெரிய அதிசயங்களை காணச் செய்திடும்
பெரிய அற்புதங்களை காணச் செய்திடும்
அரிய பெரிய அடையாளங்களை எங்களுக்கு தந்திடும்.
உம்மையே நான் நேசித்து களிகூருவேன். அது நிஜமாகும்.
இறைவா, நிறைந்த பாவ உலகிலே எந்தன் பயணம்?
நானும் பாவிதானே, என்னை ஏன் தெரிந்துகொண்டீர்?
உம்முடைய தரிசனங்கள் காலத்திற்காய் குறிக்கப்பட்டிருக்கின்றன
அன்பர் நீர் அதிசயர் நீர் உம்மாலன்றி ஒன்றுமில்லை
எனக்கு யாருமில்லை உம்மைத் தவிர வேறு நாதியில்லை.
ஜீவனைத் தந்து கிரயமாக என்னைப் பெற்றுக் கொண்டீர்
நான் என்னத்தை கொடுப்பேன் எதைக் கொடுப்பேன்
ஒன்றுமில்லை, என்னிடத்தில் தகுதியானவை யாதுமில்லை
எப்படி அதை நான் உமக்கு நிவர்த்தி செய்வேன்
பயமில்லை இவ்வாழ்க்கை பலனில்லை வேண்டும் நித்திய வாழ்வு
நிகழ்காலம் கடந்து போகும் எதிர்காலம் சீக்கிரமாய் வந்திடுமே
நித்திய காலம் எப்போது நான் சந்தித்துக் கொள்ளுவேன்
என் மரண காலத்தை நான் எதிர்நோக்கி காத்திருக்கின்றேனே
இரண்டாம் மரணம் எனக்கில்லை என்று நான் கூறுவேன்
பரிசுத்தமான உம்முடைய ஸ்தலத்தில் நான் பிரவேசிக்கச் செய்யும்
இயேசு என் ஜீவனின் கர்த்தராய் எப்போதும் இருந்திடும். ஆமென்.

29 JULY 2008


இறைவா, எனக்கென்று என்னை இவ்வுலகில் பிறந்ததும்
இயேசுவே, இவ்வுலகமும் இவ்வுலகில் உள்ளவையாவும் எதுவும் வேண்டாம்.
நீரும் உம்முடைய இரக்கமும் எனக்கு வேண்டும்.
ஆண்டவரே, என்னிடத்தில் எனக்குச் சொந்தமானது என்ன உண்டு?
அப்பா பிதாவே உமக்கு சொந்தமானதிலே அன்றோ நான் இருக்கின்றேன்.
வாழ்க, உம் இராஜ்யம் இப்புவியில் இறங்கி வருவதாக.
என்னுடைய வாழ்க்கையின் நோக்கமெல்லாம் பிறர் காரியம் ஆற்ற வேண்டும்.
தன்னலம் தொடாத படி பொதுநலச் சிந்தனையோடு வாழ விரும்புகிறேன்.
இயேசுவே, நீரே எனக்குப் பிழைப்பளிப்பவர் உம் சாயல் எனக்குப் போதும்.
ஆண்டவரே உம் திருபாதம் அமர்ந்து உம்மை நோக்கிப் பார்க்கின்றேன்
நல்லவர் என் இயேசு உம்மை வாழ்த்தவென்று வாழ்த்திடுவேன்
அன்பே என் வாழ்வினில் அதிகமாய் ஆக்கிரமிக்க வேண்டுகிறேன்
யாருமே அறியாத என்னை ஆசீர்வதிக்கின்ற தேவனே
எல்லையில்லா உமது கிருபையினால் என்னை நிரப்புவீரே
புதிய புதிய கிருபைகளால் என்னைச் சூழ்ந்து மகிழச் செய்பவரே
உம்முடைய வல்லமையைத் தாரும் பரிசுத்த வாழ்வைத் தாரும்
என்னிடத்தில் மூதாதையர்கள் செய்தே வந்த எல்லா சாபக்கட்டுகளையும்
அகற்றி உம்முடைய பரிசுத்த ஆவியால் அளவில்லாமல் நிரப்புமே.
சாத்தான் அவனை என் வாழ்வை விட்டு அகன்று போவதாக.
ஐசுவரியம் சமாதானம் என் வாழ்விலே உட்புகுவதாக.
பொதுக்காரியத்திற்கு என்னில் உள்ளவைகள் பயன்படுவதாக.
இறைவா, உம்மை நான் நேசித்து மகிழ்கின்றேன்
என் வாழ்க்கையின் எல்லா பகுதியிலும் நீரே ஆக்கிரமியும்.
வழியும், சத்தியமும் என் வாழ்வில் ஒரு அத்தியாயமாகட்டும்
வல்லமையும், ஜீவனும் என் வாழ்வின் மறு அத்தியாயமாகட்டும்
உம்மை உயர்த்தும் பாட்டு என் நாவில் என்றும் தவழட்டும்
ஒவ்வொரு நாளும் உம்மை நான் ஆராதிக்க வேண்டும்
என் சுவாசமுள்ள நாள்வரை உம் நாமத்தை உயர்த்தி சங்கீதம் பாடுவேன்
அப்பா, உம்மை நேசிக்கின்றேன் எனக்கு இருதயத்தைத் தாரும்
என் வழிகளில் நீரே வெளிச்சமும் சத்தியமுமாய் இரும்.
என் நாவிலிருந்து கடுமையானவை ஒன்றும் புறப்பட வேண்டாம்.
என் நாவில் உம் வல்லமையை வைத்து அதிகாரம் தந்திடும்.
உமக்கே ஆராதனை, உமக்கே துதி, உமக்கே மகிமை
என் இறைவனுக்கு சொந்தமானவர் நீரே அடியேன் படைக்கிறேன்
வாழ்வின் அழகானவும் என்று யாவரிலும் ஆசீர்வதிக்கப்பட்டவனாய்
என்னையும் என் குடும்பத்தாரையும் நீர் மாற்ற வேண்டும்.
இறைவா, உமக்கு நன்றி நீர் நல்லவர் நீரே பெரியவர். ஆமென்.

29 JULY 2008

இயேசுவே, எந்நாளும் உமக்கே ஸ்தோத்திரம் நான் உமக்கானவன்
இயேசுவே, உம்முடைய இனிமையான வார்த்தைகளுக்காக ஸ்தோத்திரம்
மகிமையான என் இயேசு இராஜாவே, மாறாத தெய்வமே
உந்தன் நாமம் வாழ்க உலகெங்கும் உம் அரசு வருக.
என்னுடைய பாவங்களை நீக்கினவர் நீர் சிலுவையை சுமந்தீர்
என்னுடைய சாபங்களை உடைப்பவர் நீர் குத்தப்பட்டீர்
என்னுடைய நோய்களையெல்லாம் நீரே சுமந்து தீர்த்தீர்
இயேசுவே, உம்மை எனக்கு இலவசமாய் அல்ல, மிகவும் விருப்பமே.
என் இயேசுவே, உம்மை நினைக்கும் போதெல்லாம் நான் கலங்குகின்றேன்
என் கண்களில் கண்ணீர் சொரிகின்றது. நீரே துடைக்கின்றீர்.
இறைவா, என்னுடைய பாரங்கள் யாவற்றையும் நீரே சுமந்தீர்
என்னுடைய சுமைகளையெல்லாம் உம்மீது இறக்கி வைத்தேன்.
நன்றி. நன்றி. உமக்கே என்றென்றும் நன்றி செலுத்துகிறேன்.
என் உயிருள்ள நாளெல்லாம் உம்மையே போற்றிப் பாடுவேன்.
அப்பா, பிதாவே இலவசமாய் உமது மைந்தனை
இவ்வுலகில் அனுப்பி எங்களிடத்தில் அன்பு காட்டினீர். நன்றி
பிதாவே, உமக்கு கோடான கோடி நன்றி. உமக்கே நன்றி.
தேவாதி தேவனாம் என் கர்த்தாதி கர்த்தர் இயேசு இராஜா.
நீர் வாழ்க உம் புகழ் இப்புவி முழுவதும் பரவ வேண்டும்.
உம்முடைய அன்பை இவ்வுலகம் அறிந்துக்கொள்ள உதவிடும்.
உமக்கே இவ்வுலகம் சொந்தம் நீரே எங்கள் இராஜா.
ஆண்டவரே, உம்மை நான் மெய்யாய் நேசித்துக் கொண்டிருக்கிறேனோ
அவ்வண்ணமாய் அதற்கும் மேலாய் இவ்வுலகம் உம்மை நேசிக்கவும்.
உம்மிடத்திலிருந்து புறப்பட்டு வரும் ஜீவநதியில் அவர்கள் மூழ்கவும்
இறைவா, மகிமையென்னும் உம்முடைய ஸ்தலத்திலே நீர் பரிசுத்தர்
என்னை அழைத்தபடி பரிசுத்தம் செய்த நீர் மகா பரிசுத்தர்
ஐயா, நான் ஏங்குகின்றேன் என் இயேசு நீர் தந்திடும்
உம் ஆவியால் நான் பாவம் செய்யா அடைக்கலம் சென்றிடவே.
வல்லமையும் சக்தியும் ஞானமும் உமக்கே உரித்தாகும்
நீரே, ஆண்டவரென்பேன் நித்தமும் அதுவே சத்தியம்
என் ஆண்டவரே எப்போதும் உம்மைத் துதித்திடுவேன்
என் நீர் உம்மோடு புது உலகத்தை தந்து உணர்கின்றீர்
பரிசுத்தர் பரிசுத்தர் மகா பரிசுத்தரான என் இயேசு நீரே
என்னையும் பரிசுத்தப்படுத்தப் படுத்தும் மகா பரிசுத்தப்படுத்தும்.
மாம்சமும் அதன் சுபாவங்களும் என்னை விட்டு நீங்கட்டும்.
பாவங்களும் சாபங்களும் என்னைத் தொடராமல் போகட்டும்.
இயேசுவே உம்மைக் கொண்டு மன்னிப்பின் வழி உதவிடும். ஆமென்.

30 JULY 2008

எனக்காக யாவையும் செய்பவரே, செய்து முடித்தவரே
உமக்கு நன்றி என்று சொல்லி துதிகளை ஏறெடுக்கிறேன்
உன்னதமான ஸ்தலத்திலே வாசம் செய்பவரே
என்னை உடைத்து, உருப்படுத்தி அழகாய் வனைந்திடும் குயவா.
இறைவா, சகல காரியங்களிலும் உம்முடைய காரியங்களிலும்
என்னுடைய மாம்சம் வெளிப்படாமலிருக்கச் செய்திடும்.
அப்பா, என்னுடைய ஆவி உம்மையே சார்ந்திருக்கட்டும்.
ஆதாயமானவரே நீரே என்னை வழி நடத்தும்.
நீங்க இல்லாவிட்டால் எனக்கு என்ன இருக்கிறது?
இவ்வுலகம் எனக்கல்ல, உம்முடைய ஸ்தலத்திலே இடம் தாரும்.
அப்பா, நீங்க இல்லாத இடத்தில் நான் இருக்க ஆசையில்லை
நீங்க வராத இடத்திலே நான் வர ஆசைப்படுவதும் இல்லை.
நீங்க செய்யாததை நான் செய்ய ஆசையில்லை
நீங்க சொல்வதையே நான் செய்ய ஆசைப்படுகிறேன்.
உங்களை யாவையும் என்னிலே பரிபூரணமானதாக.
நான் ஒரு சிறு பொருள் எனக்கு ஜீவனைத் தந்தவர் நீர்.
உம்முடைய கரங்களில் நான் தவழ ஆசைப்படுகிறேன்
உம்முடைய பார்வையில் நான் நிலைத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
உம்முடைய பாதையில் நான் உமது பாதரட்சையாய் வாழ ஆசை.
உம்முடைய அழகை நான் என்னிடத்தில் வேலை வாங்கும்.
உமக்கே நான் உரியவன் என்னிடத்தில் நீர் பேசும்.
அப்பா, பிதாவே ஆண்டவரே எங்களை ஆட்கொள்ளும்
அள்ள அள்ள குறையாத உம்முடைய அன்பை எனக்குத் தாரும்.
உம்முடைய கிருபை அளவில்லாமல் என்மேல் பொழிந்திடும்.
இறைவா, இவை வழிந்து நதியாய் பெருக்கெடுத்து ஓடச்செய்யும்
தேசங்கள் கடந்து போகச் செய்து உலகம் முழுவதும் சுற்றியோடி
எல்லா நிலங்களிலும் நல்ல விளைச்சலாய் பாய்ந்திடச் செய்யும்.
தேசமெங்கிலும் கனிகள் வேண்டும் அதை ஜனங்கள் புசிக்க வேண்டும்.
வாழ்வு தரும் வசனங்கள் என் வாயிலிருந்து புறப்பட வேண்டும்.
ஜீவனை, என் வாயிலிருந்து ஜீவன் தரும் வார்த்தைகள் புறப்படச் செய்யும்
இறைவா, உம்மை நான் நேசிக்கின்றேன் வாழ்த்துகிறேன்
என்னுடைய அன்பருக்கு நான் உரியவனல்ல உம் அன்பு எனக்கு வேண்டும்
நீரே நல்லவர் நீரே பெரியவர் அனைத்துமானவர்
நானோ, சுயாதீனமாய் நான் எதையும் செய்யாதபடிச் செய்யும்
தன்னலத்தோடு எந்தக் காரியத்தையும் செய்ய வைக்காதிரும்
யாவற்றிலும் நான் என்னை வெறுமையாக்க வேண்டும்
இயேசுவே உம் நாமம் ஒன்றே மகிமைப்பட வேண்டும். ஆமென்.


Life from
the Lifeless
கடவுளின் ஒருமை—பிதா, மகன்,
பரிசுத்த ஆவி—உயிரற்றவற்றில்
ஜீவனை ஊதி, புது
சிருஷ்டியாக மாற்றுகின்றனர்.